Nallur

21-9-1989 பகுதி 6

அறவழி

NONVIOLENCE

அறமுரசு

சத்தியம் என்றுல் வாக்கும் மனசும் ஒன்று படுவது மட்டுமல்ல, நல்ல மனதிலே தோன்றுகின்ற நல்ல எண்ணங்களை வாக்கில் சொல்வதே சத்திய மாகும்.

— காஞ்சிப் பெரியவர்.

அறம் 3 ★ வழி 25 ★ 1989 புரட்டாதி ★ மாத இதழ் ★ பக்கம் 6 ★ விலை 3-00

★ கல்விக் கூடங்கள் இயங்கவில்லை ★ மாணவர் வரவு குறைவு ★ ஆசிரியர்கள் ???? !!!!

தமிழ் மாணவர்களின் கல்வி பெரும் பாதிப்பு!

தமிழர்களின் சொத்து கல்வி என்பது அனைவருக்கும் தெரிந்திருந்தும் எமது பகுதிகளிலுள்ள பாடசாலைகளை இயங்க செய்வதற்கு யாரும் முன்வராதது பெரும் கவலையளிக்கிறது.

நாட்டில் நடைபெறும் திடீர் குழப்பங்களால் பாடசாலை மாணவர்களின் கல்வி பாதிக்கப்படக்கூடாது. ஆனால் இன்று நடப்பது என்ன?

பாடசாலைகள் திறக்கப்பட்டு ஆசிரியர்கள் வரவு அதிகரித்துள்ள போதிலும் மாணவர்களின் வரவின்மையால் பாடசாலைகளை இயக்க முடியாதிருப்பதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மாணவர்களின் வரவின்மைக்கு காரணம் என்ன என்பதை எமது சமுதாயத்திலுள்ள அனைவரும் சிந்திக்க வேண்டும்.

மாணவர்கள் கைது செய்யப்படுகிறார்கள், துன்புறுத்தப்படுகிறார்கள் என்பது ஒரு குற்றச் சாட்டாக இருந்தாலும் இவ்வாறான நிலை இனி வருங்காலங்களில் உருவாகமல் இருக்க சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் முயற்சி செய்ய வேண்டும்.

பல வழிகளிலும் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் நிலையை இனிமேலாவது இல்லாமல் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் பீதியின்றி தமது கல்வியைத் தொடர முடியும்.

மாணவர்களை தமது நலன்களுக்கு இரையாக்கும் எண்ணம் எமது சமுதாயத்திலிருந்து அகற்றப்பட வேண்டும்.

விசேட குழு

எமது மாணவர்களின் நன்மை கருதி பாடசாலைகளுக்கு அவர்களின் வரவை அதிகரிக்கும் நோக்குடனும், பாதுகாப்பு மற்றும் மாணவர்களின் நலன்களைப் பேணுவதற்கென வும் யாழ். கல்வித் திணைக்கள அதிகாரிகள், பெற்றூர்கள், ஆசிரியர்களை உள்ளடக்கிய விசேஷ குழு ஒன்று தெரிவு செய்யப் பட்டுள்ளது.

இந்தக் குழுவின் முயற்சிகளுக்கு தமிழ் மாணவர்களின் கல்வியில் அக்கறையுள்ள அனைத்து சக்திகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் உட்பட பல கல்வி மான்கள் பாடசாலை மாணவர்களின் கல்வி தொடர வேண்டும் என்பதை வலியுறுத்தி பத்திரிகைகளிலும், நேரடியாகவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இத்தகைய வேண்டுகோளுக்கு செவிசாய்த்து எமது மாணவர்களின் எதிர்காலத்திற்கு வளம் சேர்ப்போம்.

ஜோதியான மகாத்மா

சத்தியத்தின் கோலையூன்றி
சர்வதேசம் சென்றவர்
கத்தியின்றி யுத்தமின்றி
அடிமைப் போரில்வென்றவர்
தத்துவத்தின் சக்தி என்று
தலைமைத்துவம் பெற்றவர்
நித்தியமாய் மனிதருள்ளே
மகாத்மா ஜோதியானவர்.

— ராஜி —

அறநோக்கு

மூன்றும் வயதினில் - அறவழி!

புதிய சமுதாய வெளியீட்டகத்தின் மாதாந்தப் பத்திரிகையாகிய ''அறவழி''யின் இருபத்தைந்தாவது இதழை நம் வாசக அன்பர்களின் — ஆதரவுக்கரங்களில் சமர்ப்பணம் செய்து வெளியிடுவதில் நாம் மகிழ்ச்சியும் — பெருமையும் அடைகின்றோம்.

1986ம் ஆண்டு மே திங்கள் முதல் பிரசவமாகி, மெல்ல, மெல்ல வளர்ந்து இரண்டு ஆண்டுகளைப் பூர்த்தி செய்து மூன்றுவது வயதினில் காலடி எடுத்து வைக்கும் இந்நாள் இதன் வரலாற்றில் ஒரு பொன்னான நாள் —

கடந்த இரு ஆண்டுகளாக இக் குழந்தையின் வளர்ச்சியில் அதீத அக்கறையும் — ஆர்வமும் காட்டிய பல வாசக அன்பர்கள் — ஆதரவாளர்களின் — உண்மையான, — விசுவாசமிக்க அன்பையும் ஆதரவையும் இக்கணத்தில் பெருமையுடன் நினைவில் கொள்கிறோம்.

பல்வேறு விதமான நெருக்கடிகளுக்கும் — கஷ்டங்களுக்கும் மத்தியில் — தமிழ் மண்ணில் ஒரு அரசு சார்பற்ற தொண்டர் நிறுவனம் ஒரு பத்திரிகையை வெளியிடுவது என்பது இலகுவான காரியமல்ல. இப்பணியில் நாம் அனுபவித்த கஷ்டங்கள், துன்பங்கள் ஏராளம்.

ஆயினும் ''அறவழி''யின் வாசக அன்பர்கள் காட்டிய அன்பும் — ஆதரவும் — ஊக்கமும் எம் துன்பங்கள் — கஷ்டங்களை மறக்க செய்தன என்பதை உறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றோம்.

நம் மண்ணில் வெற்றிகரமாகத் துவங்கப்பட்ட பத்திரிகைகள், சஞ்சிகைகள், வெற்றிகரமாகவே மூடப்பட்ட சம்பவங்களையும் அறிவோம்.

இருப்பினும் ''அறவழி'' தனது புனித பயணத்தைத் தொடர்ச்சியாகத் தொடர — வழி சமைத்துக் கொண்டிருக்கும் பல அன்பர்களை இந் நன்னாளில் நினைவு கூர்வது நம் கடமையாகும்.

நம் பிரதேசத்தில் — பத்திரிகையை வெளியிட்டு — லாப மீட்டுவதோ அன்றி செய்தித் துறையில் போட்டா போட்டி போடுவதே எம் நோக்கமல்ல.

சமுதாயத்தில் உயர் பண்பாட்டு நெறிகள் — நல்ல வாழ்க்கை நெறிகள் — தர்ம நெறிகள் பரப்பப்பட வேண்டும். அவற்றினை மக்கள் — மிக விசேடமாக எதிர்கால, வளரும் சந்ததியினர் பின்பற்ற வேண்டும். அன்பு — அறவழி — சத்தியம் — நம்பிக்கை — சமாதானம் — ஜீவகாருண்யம் — மனித நேயம் போற்றப்படல் வேண்டும். இதன் அடிப்படையில் புதிய சமுதாயம் உருவாக வேண்டும் என்பதே ''அறவழி''யின் ஆதங்கமாகும்.

அறவழிக் குழந்தையின் இந்த நீண்ட நெடும் பயணம் வெற்றிகரமாக, உறுதியுடன் தொடர இந் நன்னாளில் உங்களின் விசுவாசமிக்க ஆசீர்வாதங்களையும், பிரார்த்தனையை வழங்குங்கள் என அன்பாக வேண்டுகின்றோம்.

★ 25 - வது சிறப்பு மலர் ★

● உணவைச் சுருக்கி அறிவைப் பெருக்குக!

● படிப்பது ஒரு கலை சிந்திப்பது ஒரு கலை

கற்க சாகும்வரை கற்க

— தவத்திரு குன்றக்குடி அடிகளார்

கற்பது என்பது ஏதோ மாணாக்கர்கள் மட்டுமே கற்பது என்று முடிவெடுத்துவிடக் கூடாது. கற்பது என்பது மானிடராகப் பிறந்த ஒவ்வொருவரும் சாகிறவரையில் கற்கவேண்டும்.

குடும்பத்தில் கணவன்—மனைவி—குழந்தைகள் எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுவதைப் போல் நல்ல நூல்களைக் கற்று விவாதிக்க ஊக்கம் இருந்தாகவேண்டும்.

இன்றைக்கு உடனிருந்து உண்கிற பழக்கமே உண்டாவதில்லை. எங்கே அவர்கள் படிக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை.

ஆக நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்து வைத்துக் கொண்டு தந்தை - தாய் - குழந்தைகள் சூழ அமர்ந்துகொண்டு கற்று விவாதம் பண்ணித் தெளிவுகளை உண்டாக்கவேண்டும். அப்பொழுதுதான் வீடு பல்கலைக் கழகமாகும். இன்றைக்கு வீடு கல்விக்கூடமாக, பல்கலைக் கழகமாக இல்லாமல் அது சாப்பாட்டுக் கூடம்போலவே வளர்ந்து வருகிறது.

வீட்டில் ஒரு நல்ல நூலகம் இருக்கவேண்டும். அந்த வீட்டில் குறித்த நேரத்தில் குடும்பத்தில் கல்விப்பயிற்சி நடக்கவேண்டும். அந்தக் காலத்தில் பாரதிதாசன் சொல்லுவான் தாய் தமிழ் வாத்திச்சியாக வீட்டில் இருந்திருக்கிறாள். நல்ல பண்பாட்டு இலக்கியங்களை அவள்தான் அறிமுகப் படுத்துவாள். குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பாள்.

இன்றைக்கு அந்தமாதிரி ஒரு சூழல் தமிழர் குடும்பங்களிலே இல்லாதது ஒரு பெரியகுறை என்பதை மறந்து விடக் கூடாது,

ஆக, அறிவுடையோர் ஆவது அறிந்து தன்னுடைய நாட்டினுடைய பண்பாட்டை வளர்க்க வேண்டும். இதற்குரிய சூழல் முதலில் கற்பது. கற்பது என்பது மனிதனுக்குப் பழக்கமாக வேண்டும்.

நாம் ஒருவரை யொருவர் சந்தித்தால் என்ன படித்துக் கொண்டிருக்கிறீரும் என்று கேட்கிறபழக்கமே கிடையாது. வீட்டுக்கு வந்தாலும் இப்ப என்ன சாப்பிடுகிறீர்கள் என்று கேட்கிறார்களே தவிர இப்ப என்ன படித்துக்கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்பது கிடையாது.

அறிவு வாழ்க்கையை வெறும் உணவு வாழ்க்கையாகவே மாற்றிவிட்டோம். வாழ்க்கையில் அது ஒரு பகுதி. அவ்வளவுதான். 'உணவு' என்று சொல்கிற பொழுதெல்லாம் திருவள்ளுவர் 'சிறிது' என்றார்.

''செவிக்கு உணவில்லாத பொழுது
சிறிது வயிற்றுக்கும் ஈயப் படும்''

என்று சொன்னார்.

இந்தச் சிறிதாக உணவு உண்ணும் பழக்கம் இல்லாத தாலேயே நாம் பெரிய வியாதிகளுக்கெல்லாம் ஆளாகி விடுகிறோம்.

இந்தக் 'கற்க' என்று அவர் அணைபோடுவதற்குப் பொருள் - கற்பதை மனிதன் பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். வழக்கமாக்கிக்கொள்ள வேண்டும் என்பதுதான்.

எதுவரையில்? சாகும்வரையில் என்றார்.

ஆக சாகிற மூச்சுவிடப் போகிற பொழுதுகூட 'அந்தப் புத்தகத்தை எடுத்துக் கொண்டுவா படிக்க வேண்டும், எனச்சொல்.

இப்பொழுது சாவோடு போராடுகிறோம் என்று சொன்னால் நமக்குப் பணப் பெட்டியைப் பற்றிய கவலைதான் வருகிறதே ஒழிய அறிவைப் பற்றிய கவலை வருவதே கிடையாது.

சிலருக்கு இன்னமும் புத்தகம் படிக்கிற கலைபோய தெரியாது. தேவையில்லாத பகுதியை மூன்றுமணி நேரம் படித்துக்கொண்டே யிருப்பார்கள்.

கற்பது என்பது ஒருகலை. சிந்திப்பது என்பது ஒருகலை. எண்ணுவது என்பது ஒருகலை. இவற்றையெல்லாம் மனிதன் பிறந்து வளர்ந்து கற்றுக் கொள்கிறான்.

(தமிழ் முரசு, சிங்கப்பூர்)

அறவழி

நிர்வாகம்
புதிய சமுதாய வெளியீட்டகம்
த. பெ. இல : 2
சாவகச்சேரி

ஆசிரியர்
க. ஜீவகதாஸ்

இணையாசிரியர்
என். கே. துரைசிங்கம்

அச்சகம்
புனிதவனன் கத்தோலிக்க-அச்சகம்
பிரதான வீதி
யாழ்ப்பாணம்

தனிப்பிரதி விலை
ரூபா : 3-00

சந்தா விபரம்
உள்ளூர் ஒருவருடம்
ரூபா 40-00

வெளிநாடு
இந்தியா - ரூபா 110-00
மத்தியகிழக்கு -
ரூபா 120-00
ஐரோப்பா - ரூபா 140-00
அமெரிக்கா, கனடா } ரூபா 160-00

சந்தாதொகையை காசோலையாகவோ, மணிஆடராகவோ '' அறவழி-பத்திரிகை க/கு இல: 2365 எனக்குறித்து அனுப்புக.

— நிர்வாகி

அறவழியே மலர்ந்து வாழ்க

அறக் கொள்கைக்கென ஒரு
வரலாறு படைத்து
சமூகநலனே — என்றும்
கருத்தாய்க் கொண்டு
அறத்துறை வளம்பெற
கலைமன்றம் அமைத்து
அறத்தைக்குறிக்கும்-வழியாய்
வையகத்துள் கலந்து
அறவழியாய் — நமக்கு
மலர்ந்து சிறந்து
மாணவர் அறிவை — தம்
மனத்துள் கொண்டு
அவர்தம் ஆக்கத்துக்கு
ஊக்கம் அளித்து
அறிவு சான்ற — நம்
காந்தித்தாத்தா போன்ற —
பலரின்
ஆக்கமும் இடம்பெறச்செய்த
அறவழியே - நீ
ஆண்டுகள் பத்து கழிந்தாலும்
— உன்
வளர்ச்சி குன்றிடவில்லை.
இடையூறுகள் பலவந்த
போதும்
உறுதியாய் நின்று
வளர்மதி போன்று
மாணவர் அறிவை
வளரச்செய்யும் — அறவழியே
மலர்ந்து வாழ்க நீ என்றும்.

க. தயாளன்

அறவழிப் போராட்டக்குழு

சமுதாய மாற்ற நிறுவனமாகிய அறவழிப் போராட்டக் குழு எனும் அமைப்பானது தந்தை செல்வா அரங்காவல் குழுவினால் 25-02-1979-ல் கைதடி சைவச் சிறுவர் இல்ல மண்டபத்தில், அதன் அப்போதைய செயலாளராகிய திருமிகு. க. சச்சிதானந்தனால் ஆரம்பிக்கப்பட்டது.

1979-ம் ஆண்டு மாசி மாதம் 22, 23, 24-ம் திகதிகளில் சைவச் சிறுவர் இல்லத்தில் நடத்தப்பட்ட அறவழிப் பயிற்சி முகாமில் பங்குபற்றிய இளைஞர்-யுவதிகளைக் கொண்டு 25-ம் திகதியன்று அறவழிப் போராட்டக்குழு ஸ்தாபனமாகியது.

இவ் ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்காக உழைத்துவருபவர்கள் பின்வருமாறு :

காப்பாளர்கள் :
பேராசிரியர் கு. நேசையா, திருமிகு. க. சச்சிதானந்தன்

தலைவர் :
திருமிகு. வீ.எஸ். துரைராஜா

செயலாளர் :
திருமிகு. க. ஜீவகதாஸ்

நிதித்துறை இயக்குனர் :
திருமிகு. வீ. ஜீ. தங்கவேல்

இயக்குனர்கள் :
திருமிகு. இ. பேரம்பலம், திருமிகு. ச. தங்கராசா, திருமிகு. அ. குணசேகரம், திருமதி. தங்கராசா கனகம்மா, திருமதி. ஈஸ்வரி ஜீவகதாஸ்

கல்வி ஆலோசகர் :
திருமிகு. க. கோபாலகிருஷ்ணன்

பணிமனைத் தொண்டர்கள் :
திருமிகு, எம். மார்க்கண்டு, திருமதி. இராசம்மா சண்முகநாதன், செல்வி. வீரசிங்கம் தர்மினி, செல்வி. கந்தையா ராகினி, செல்வி. செ. கேதீஸ்வரி, திருமிகு. க, ஜீவகதாஸ்.

செயல் திட்டங்கள் :

- ○ பாலர் பாடசாலைகள்
- ○ அகதிகள் உதவித்திட்டம்
- ○ விதவைகள் மறுவாழ்வுத்திட்டம்
- ○ கல்விப்புலமைப்பரிசில் திட்டம்
- ○ சமுதாய வளர்ச்சித்திட்டம்
- ○ பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி
- ○ தலைமைத்துவப் பயிற்சி
- ○ தையற் பயிற்சி
- ○ நூலக சேவைத்திட்டம்
- ○ அறவழி பயிற்சி
- ○ கருத்தரங்குகள், கூட்டங்கள்
- ○ அறவழி நல்லொழுக்கச் சிறுவர்கழகம்
- ○ அறவழி தாய்மார் அணி
- ○ சமுதாய மாற்றப் பயிற்சி
- ○ புதிய சமுதாய வெளியீட்டகம்
- ○ புதிய சமுதாய கல்விநிறுவனம்
- ○ மரம் நடுகைத் திட்டம்
- ○ மற்றும் பொது நன்மைப்பணிகள்

அறவழிப் போராட்டக்குழுவானது சர்வதேச போர் எதிர்ப்பாளர் இயக்கம் (WRI) சர்வதேச தோழமை இணக்க இயக்கம் (IFOR) போன்றவற்றின் இலங்கைக்கிளையாகவும் இயங்கிவருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

'பாலருக்த பயிற்சியில்லாமல் கற்பிக்க முடியாது''

''பாலர்களுக்கு கல்வி கற்பிக்கும் எவரும் பயிற்சியில்லாமல் கற்பிக்க முடியாது'' என்று அறவழி கல்விப் பகுதி ஆலோசகர் திரு கே. கோபால கிருஷ்ணன் தெரிவித்தார்.

அறவழிப் போராட்டக்குழுவினால் நடத்தப்படும் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பினை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

திரு. கோபால கிருஷ்ணன் மேலும் பேசுகையில் கூறியதாவது;

''இன்றைய கல்வி முறை குழந்தைகளை மையமாகக் கொண்டிருப்பதால் அவர்களுக்கு கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் குழந்தைகள் பற்றி நல்ல அறிவுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

ஒருவர் நல்ல கல்வித்தகமையுள்ளவராக இருந்தாலும் குழந்தைகளைப்பற்றி தெரியாவிட்டால் அவரால் குழந்தைகளுக்கு கற்பிக்க முடியாது. அதாவது பெரிய மேதையாக இருந்தாலும் குழந்தைகள் சம்பந்தமான அறிவு இல்லாவிட்டால் கல்வி போதிக்க முடியாது.

குழந்தைகளின் தேவை, மன எழுச்சி, விருப்பம் என்பனவற்றை அறிந்து அதற்கேற்றவகையில் கல்விபோதிக்க வேண்டும்.

குழந்தைகள் என்னென்ன வற்றை நுகர்ந்துகொள்ள விரும்புகிறார்களோ என்பதனை ஆசிரியர்கள் அறிந்து வைத்திருக்க வேண்டும்.''

★ உண்மையை நேசி ஆனால் பிழையை மன்னித்துவிடு ★



இந்தியாவில்- காடுகளின் பாதுகாப்புக்கு சிப்கோ இயக்கம்

நாட்டின் பெரும் சொத்துகளில் ஒன்றாகக் கருதப்படுவது — காடுகள் இயற்கையின் செல்வம் இது. நாடுகள் வளம் கொழிக்கவேண்டுமாயின் நாட்டில் காடுகள் செழிக்க வேண்டும்.

வட இந்தியாவில் 'உத்தரகண்ட்' ஒருகிராமம். அங்கே பெரும் காடுகள் நிறைந்திருக்கின்றன, 'உத்தரகண்ட்' கிராமக் காடுகளில் – உயர்ந்த, பெருத்த மரங்கள் நீண்டு வளர்ந்திருக்கும்.

இக்கிராமத்தில் இருக்கும் காடுகளிலுள்ள மரங்கள் மீது மரவியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் பெரிய ஒப்பந்தக்காரர்களுக்கு அலாதி பிரியம்.

இக் காடுகளில் இருக்கும் மரங்களை வெட்டி வீழ்த்தி, பெரும் துண்டுகளாக்கி பெரிய வாகனங்களில் ஏற்றி நகரத்திற்குக் கொண்டு சென்று விற்று லாபம் ஈட்டி வந்தார்கள் பெரும் மரவியாபாரிகள்

காடுகள் அழிக்கப்பட்டன

'உத்தரகண்ட்' கிராமத்தின் எழிலுக்கு நிறைவுசேர்த்த காடுகள் மெல்ல, மெல்ல அழிக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

காடுகள் அழிக்கப்படுகின்றனவே என்றகவலை ஏதுமின்றி அக்கிராமத்து ஆண்கள் இருந்தார்கள். காடுகள் அழிந்து போகின்றன. ''எம் தாய் போன்ற பெரும் சொத்தாகிய எமது காடுகளை கிராமத்து மக்கள் தான் காப்பாற்ற வேண்டும்'' என்ற எண்ணம் அக் கிராமத்தில் வசிக்கும் ஒரு விதவைப் பெண்ணுக்கு ஏற்பட்டது.

காடுகளை பாதுகாப்போம்

அந்த இளம் விதவை தான் ''கௌருதேவி.''

உத்தரகண்ட் கிராமத்தில் எல்லோராலும் மதிக்கப்பட்டுவந்தவள். நல்ல சமூகப் பார்வை கொண்டவள். காடுகள் அழிக்கப்படுவதையிட்டு மனம் வெதும்பினாள்.

''எம் கிராமத்தின் காடுகளைப் பாதுகாக்கவேண்டிய கடமைஎமக்குத்தான் உண்டு'', அதை நாம் அறவழி ரீதியிலான போராட்டம் மூலம் பாதுகாக்க வேண்டும்'' என அக் கிராமத்துப் பெண்கள் மத்தியில் உரையாடினாள். அவர்கள் மத்தியில் அறவழிப் போராட்ட உணர்வை ஏற்படுத்திக் கொண்டாள்.

ஒப்பந்தக்காரர்களின் மரவெட்டிகள் எம் காடுகளில் இருக்கும் மரங்களை வெட்ட இனிமேல் அனுமதிக்கப்போவதில்லை என ஒவ்வொரு பெண்ணும் திடசங்கற்பம்பூண்டனர்.

கோடரிகள் – வாள்கள் சகிதம் வரும்மரவெட்டிகளையும்– அவர்களின் முதலாளிமார்களான ஒப்பந்தகாரர்களையும் எப்படி எம்மால் தடுக்க முடியும்? என்ற கேள்வி ஒவ்வொரு பெண்ணிடமும் ஏற்பட்டது.

இக்கட்டத்தில்தான் கௌரு தேவி — காடுகளில் மரங்களை வெட்டாமல் எப்படிப் பெண்களால் பாதுகாக்க முடியும் என்பதைப்பற்றி விளக்கிக் கூறினாள்.

''மரங்களை மரவெட்டிகள் வெட்ட காடுகளுக்கு வரும் போது கிராமத்தில் இருக்கும் அத்தனை பெண்களும் காடுகளுக்குச் செல்ல வேண்டும். காடுகளில் நீண்டு வளர்ந்து நிற்கும் மரங்களை ஒவ்வொரு பெண்ணும் தம் இருகைகளாலும் இறுக்கக் கட்டிப் பிடித்தல் வேண்டும். ''மரங்களை வெட்டுவதாயின் – முதலில் எம்மை வெட்டி வீழ்த்திவிட்டு மரங்களை வெட்டலாம்.''

எனக் கூறல் வேண்டும் என அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டது.

— ஜீவகன் —

1974ம்ஆண்டுபங்குனி26-ம் திகதி.

உத்தரகண்ட் கிராம ஆண்களை ஏதோ கொடுப்பனவு வழங்கவென அம் மாவட்ட அரசு அலுவலகத்திற்கு அழைத்தது.

கிராமத்தில் உள்ள பெரும் பாலான ஆண்கள் போய் விட்டனர். பெண்கள் மட்டுமே கிராமத்தில் இருந்தனர்.

இத்தருணம் பார்த்து ஒப்பந்தக்காரர்களின் மரவெட்டிகள் கோடரிகள் வாள்கள் சகிதம் காடுகளை நோக்கிப் படையெடுத்தனர். மரவெட்டிகள் காடுகளில் இருக்கும் மரங்களைத் தறிக்கப் போகிறார்கள் என்ற செய்தி காட்டுத் தீ போல கிராமத்தில் பரவி விட்டது.

மரங்களை கட்டிப்பிடித்தார்கள்

வீடுகளில் செய்து கொண்டிருந்த வேலைகளை அப்படியே விட்டு, விட்டு கௌருதேவி தலைமையில் பெண்கள் காடுகளில சூழந்து விட்டனர்.

மரவெட்டிகள் மரங்களை வெட்டத் தயாராகினர். இவ் வேளையில் ஒவ்வொரு பெண்ணும் காட்டில் வெட்டப்படக் கூடிய ஒவ்வொரு மரத்தையும் தம இரு கைகளாலும கட்டிப் பிடித்துக் கொண்டனர்.

அந்த வேளையில், கௌரு தேவி மரவெட்டிகளைப் பார்த்து, ''சகோதரர்களே'' இந்தக்காடு எமது தாய் வீடு போன்றது. இதில் இருந்து நாம் எமக்குத் தேவையான பலவற்றை பெறறுக் கொள்கிறோம். இலை இருப்பதனால் தான் எமது கிராமம் எவ்வித அழிவும் இன்றி பாதுகாப்பாக இருக்கின்றது. நீங்கள் இக் காட்டை அழித்து விடுவீர்களாயின் – அடுத்தகணம் எம் கிராமம் அழிந்து விடும். இயற்கை எமக்குக்கொடுத்த செல்வம் இது – இதனை நாம் பாதுகாக்க வேண்டும்.'' நான் சொல்வதையும் மீறி மரங்களை வெட்டுவதுதான் உங்கள் முடிவானால், மரங்களைக் கட்டிப் பிடிக்கும் பெண்களை முதலில் உங்கள் கோடரிக்கும் – வாளுக்கும் இரையாக்கி விட்டுப் – பின் வெட்டவும்.''

என உணர்ச்சியும், ஆவேசமும் மேலிட கௌருதேவி கூறினாள்.

மரவெட்டிகளுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. மரங்களை வெட்டா விட்டால் தமது அன்றைய கூலி கிடையாமல் போய்விடுமென்ற நினைப்பு அவர்களுக்கு!

மிதமிஞ்சிய குடிபோதை மயக்கத்தில் நின்ற சில மரவெட்டிகள் கோபாவேசம் கொண்டு, பெண்களுடன் தகாத வார்த்தைகளில் பேசினர்.

ஆயுதங்கள்

கீழே போடப்பட்டது

மரங்கள் மீது கோடரிகளையும் – வாள்களையும் அவர்களால் போட இயலாமல்போய் விட்டது.

மனச்சாட்சியை தொடும் படியாக அமைந்த கௌரு தேவியின் பேச்சு சிலரின் இதயத்தைத் திறந்தது. உண்மை நிலையை உணரத் தொடங்கினார்கள். அவ்விதமானோர் தாம் கொண்டு வந்த ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டுச் சென்றனர்.

உத்தரகண்ட் கிராமியச் செய்தி, பெண்களின் போராட்டம் பற்றி ஏனைய கிராமங்களுக்கும் – நகரங்களுக்கும் பரவத் தொடங்கின.

முதலாளிகள்

பின் வாங்கினார்கள்

எஞ்சியிருந்த மரவெட்டிகளும் செய்வது என்னவென்று புரியாது மெள்ள மெள்ள அந்த இடத்தை விட்டு அகன்றனர்.

ஒப்பந்தகாரர்கள் பெரிய லொறிகள் சகிதம் காட்டுக்கு வந்தனர். மரங்கள் வெட்டப் படாமையைக் கண்டனர். ஒவ்வொரு மரங்களையும் பெண்கள் கட்டிப் பிடித்த வண்ணம் நின்றதைப் பார்த்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களுடன் மிடுக்காகப் பேசிப் பார்த்தனர். பின்னர், மிரட்டினர். எதுவுமே எடுபடவில்லை.

வெறும் லொறிகளுடன் நகரம் திரும்பினர்.

வெளிக்கிராமம் சென்ற உத்தரகண்ட் கிராம ஆண்கள் வீடுகளுக்கு வந்தனர். வீடுகளில் தம் மனைவி, சகோதரிகளைக் காணுமல் தேடினர். ஆண்கள் கூட்டமாக காட்டினை நோக்கிச் சென்றனர். அங்கே அவர்கள் கண்ட காட்சியைப் பார்த்து ஒவ்வொருவரும் வியந்தனர்.

தம் பெண்களின் முன்மாதிரியான போராட்டத்தையும், காடுகள் மீது அவர்கள் கொண்டிருந்த நேச உணர்வையும் எண்ணி மகிழ்ந்தனர்.

சிப்கோ

மரங்களைக் கட்டிப் பிடித்தல் மூலம் காடுகளைப் பாதுகாக்கும் போராட்டமுறை இந்தியாவின் ஏனைய பகுதிகளுக்கும் பரவியது. ''காடுகள்'' அழித்தலில் இருந்து பாதுகாக்கப்படுகின்றது.

இதில் இருந்து உருப்பெற்றதுதான் ''சிப்கோ இயக்கம்'' (Chipko Movement) சிப்கோ என்றால் இந்தி மொழியில் ''கட்டிப் பிடித்தல்'' என்று பொருளாகும்.

''சிப்கோ இயக்கம்'' இந்தியாவில் இப்போது மிகவும் பிரபல்யமிக்க ஒரு அறவழி இயக்கமாகத் திகழ்கின்றது. இதன் கிளைகள் பல மாநிலங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

காடுகளையும் – மரங்களையும் பாதுகாப்பதில் அரும்பணியாற்றியமைக்காக ''சிப்கோ இயக்கத்திற்கு'' 1988ம் ஆண்டில் ''தி றைற் லிவ்லிஹூட்'' எனும் இங்கிலாந்து அமைப்பு பரிசில் வழங்கிக் கௌரவித்தது.

இயற்கை வளத்தைப் பாதுகாக்கும் பணியில் ''உத்தரகண்ட்'' கிராமப் பெண்களின் அறவழிப் போராட்டம் பெரும் முன் மாதிரியாகும்.

அவலம்

தி. உதயசூரியன்

மண்ணில் சரியும்
மகத்துவங்கள் - என்
கண்ணில் அறையும்
ஆணிகளாக வர,
இழந்து விட்டேன் - என்
கண்களை.
நஞ்சினை ஒத்த
கொடியோர் செயல் - என்
நெஞ்சினை மிதிக்கும்
சப்பாத்துக்களாக மாற,
கல்லாகிப் போனது
நெஞ்சு.
தொடர்ந்த வாழ்வும்
தொடர்பில்லாது போக
என்னை நான்
தொலைத்து விட்டேன்.
நான் தொலைந்து
சில நாள் கூட
ஆகவில்லை.
தேடிப் பிடித்து விட்டாள்
என்னை ஒருத்தி.
தாயின் வடிவினை ஒத்த
அவள் செயலால்,
என்
காயங்கள் ஆறின.
நெஞ்சு குளிர்ந்தது.
ஒளி பெற்றன
கண்கள்.
சூழலைப் பார்த்தேன்.
ஓ.....
நான் குருடனாகவே இருந்திருக்கலாம்.
கழிவிரக்கம் குடி கொண்டது
நெஞ்சில்.
ஆம்
சூழ நின்ற எல்லோர்
கைகளிலும் தீப்பந்தங்கள்
என்னைச் சுடுவதற்கு.
அவர்கள் மத்தியில்
என்னைக் கண்டெடுத்த
அவளும்
நின்றிருந்தாள்.
அவளின் ஒரு கையில்
பெற்ரோல்,
மறுகையில்
தீப்பெட்டி.

வீடுதோறும் திருக்குறள்

எப்படி ஒரு முதலுதவிப் பெட்டி வீட்டில் இருக்கிறதோ - அதே போல ஒரு முதலுதவிப் பெட்டி மருந்து போல திருக்குறள் வீடு தோறும் இருக்க வேண்டும்.

ஒருசிக்கல் என்று வந்தால் உடனே திருவள்ளுவர் ஏதாவது வழி சொல்லுகிறாரா? என்று புரட்டிப் பார்க்கவேண்டும். ஏனென்றால் அது வாழ்க்கை நூல்.

வாழ்க்கையில் ஒரு சிக்கல், இடர்ப்பாடு வந்தால் திருவள்ளுவர் இதற்கு ஏதாவது வழி சொல்லுகிறாரா? என்று திருக்குறளைப் பார்த்துவிட்டுத்தான் வழக்கறிஞரிடம் போக வேண்டும்.

திருக்குறளை முதலில் பார்த்து விட்டுத்தான் டாக்டரிடத்தில் போக வேண்டும். சாமியாடியிடம் கேட்க வேண்டும் 'கசடறகற்பவை கற்க, உனக்கு ஆண்மை வேண்டும். தைரியம் வேண்டும். துணிவு வேண்டும். வாழ்க்கையில் நம்பிக்கைவேண்டும். உன்னை நீ நம்பியாக வேண்டும்.

★ துன்பம் உண்மைக்கு முதல்வழி ★

நல்ல நண்பன் யார்?

— கண்ணதாசன் —

நல்ல மனிவியைத் தேர்ந் தெடுப்பது போலவே, நல்ல நண்பனைத் தேர்ந்தெடுப்பதி லும் எச்சரிக்கையாகவே இரு க்க வேண்டும்.

உன் எதிரியை நீ சுலபமா கவே அடையாளம் கண்டு கொண்டு விட முடியும்.

ஆனல், நண்பர்களிலே, நல்ல நண்பர்கள் யார் என் பது அனுபவத்தின் மூலமே தான் தெரியுமே தவிர, சாதா ரண அறிவினல்கண்டுகொள்ள முடியாது.

முகத்துக்கு நேரே சிரிப்பவன்
முகஸ்துதி செய்பவன்.
கூனிக் குழைபவன்.
கூழைக் கும்பிடு போடுபவன்

இவ்வெல்லாம் நல்ல நண் பன் மாதிரியே தோற்றமளிப் பான்.

எந்த நேரத்தில் அவன் உன் னைக் கவிழ்ப்பான் என்பது கட வுளுக்கும் அவனுக்கும் மட் டுமே தெரியும்.

ஆகவே ஒருவனை நண்பனுக் கிக் கொள்ளுமுன் அவனைப் பற்றி நன் முகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

சரியாகத் தெரிந்த பின்பு தான், அவனிடம் ரகசியங் களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும்.

நன்முக ஆராய்ந்து, 'இவன் நல்லவன்தான்' என்று கண்ட பின், ஒருவனை நண்பனுக்கிக் கொண்டு விட்டால், பிற கு அவன்மேல் சந்தேகப் படக் கூடாது.

"அவசரத்தில் ஒருவனை நம்பி விடுவதும், நம்பிக்கைக்கு உரிய வன் என்று தேர்ந்தெடுக்கப் பட்ட ஒருவனைச் சந்தேகிப்ப தும். தீராத துன்பத்தைத் தரும்" என்முன் வள்ளுவன்.

— சரி, நல்ல நண்பனைத் தேர்ந் தெடுப்பது எப்படி?

யாரோடு நீ பழக ஆரம்பிக் கின்முயோ, அவனோடு நீ இனி மையாகப் பழக வேண்டும்.

கொஞ்சக் காலத்திற்கு அதை, நீ நட்பாகக் கருதக் கூடாது.

வெறும் பழக்கமாகத்தான்.

உனக்குக் கஷ்டம் வந்த போது அவன் கை கொடுத் தால், உன்னைப் பற்றி நல்ல விதமாக. நீ இல்லாத இடத் தில் அவன் பேசுவதைக் கேள் விப் பட்டால்.

பிறர் உன்னைப்பற்றித் தவ முகப் பேசும்போது அவன் தடுத்துப் பேசியதாக அறிந் தால் —

அவனை நீ நம்பத் தொடங் கலாம்.

தொடர்ந்து இதுபோன்ற பல செய்திகளைக் கேள்விப் பட்ட பிறகுதான், அவனை நண்பனுக நீ வரித்துக்கொள்ள வேண்டும்.

பல இடங்களில் ஒரே மாதிரி ஒருவன் நடிக்க முடி யாது. ஆகவே, உன் மீது அவன் வைக்கும் அன்பும் உண் மைபாகத்தான் இருக்க முடி யும்.

நட்பு என்பது வெறும் முகஸ் துதி அல்ல!

ஆபத்தில் உதவுவது ஒன்றே நட்பு.

நீ அழும்போது உண்மை யிலேயே அவனுக்கும் அழுகை வருகிறது என்முல் அதுதான் நட்பு.

நண்பர்களை மூன்று வகை யாகப் பிரிக்கலாம். ஒன்று – பனைமரம் போன்ற நண்பர்கள்; இரண்டு – தென்னைமரம் போன்றவர்கள் – மூன்று வாழைமரம் போன்றவர்கள்.

நம்மிடம் எந்த உதவியை யும் எதிர்பாராமல் நமக்கு உதவுகிறவன் பனைமரம் போ ன்ற நண்பன்.

நம்மிடம் அவ்வப்போது உதவி பெற்றுக்கொண்டு நண் பனக இருக்கிறவன் தென்னை மரத்துக்கு இணையான நண் பன்.

தினமும் நம்மிடம் உதவி பெற்றுக் கொள்கிறவன் வாழைமரம் போன்ற நண்பன்.

இந்த மூவரில் —

பனைமரம் போன்ற நண்ப னையே நீ தேர்ந்தெடுக்க வேண் டிய நண்பன்.

நல்ல மனிவியை எப்படி இறைவன் அருளுகிறனே, அப் படியே நல்ல நண்பர்களையும் அருளுமாறு இறைவனைப்பிரார் த்திப்பது நல்லது.

"மனிதத்தை பேணி வளர்க்கும் —

'அறவழி' பத்திரிகை வாசிக்கும்போது மகிழ்ச்சி தருவதாக உள்ளது"

"மனிதத்தை இன்று தேடி அலைய வேண்டியுள்ளது. மனி தம் செத்துவிட்டதோ என்று எண்ணுமளவிற்கு 'மனிதம்' என்பது இந்த மண்ணில் இல் லாமல் போய்விட்டது." இவ் வாறு கைதடி ஆயுள் வேத சித்த மருத்துவ பீட மாணவன் சு. வடிவேலு தெரிவித்தார்.

முன்னெடிகளால் ஏற்பாடு செய்யப்பட்டு டாக்டர் கே. ரி. எஸ். சபாநாதன் தலைமையில் கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் நடை பெற்ற 'அறவழி' பத்திரிகை ஆய்வரங்கு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினர்.

திரு. வடிவேலு மேலும் பேசுகையில் கூறியதாவது; "இன்று மனித உடலில் மிரு கம் தான் வாழ்கிறது என்று நாம் சந்தேகப்பட வேண்டிய நிலையிலிருக்கிறோம்.

ஆய்வரங்கில் சித்த மருத்துவபீட மாணவன் எஸ். வடிவேலு உரை

காலையில் பத்திரிகைகளை கையிலெடுத்தால் இளைஞர் சடலம் ஆஸ்பத்திரியில் ஒப்ப டைப்பு, குண்டு வெடிப்பு, துப்பாக்கிச்சூடு போன்ற பிரச் சனைகளே பதிரிகை செய்திக ளாக இருக்கின்றன.

இதற்கு காரணம் என்ன? மனிதத்தை இந்த மண் என்றோ இழந்து விட்டமையாகும். எனவே இத்தகைய ஒரு நெருக் கடியான சூழலில் மனிதத்தை வளர்க்கவும், மனிதத்துவத்தை பேணும் நோக்குடனும் புதிய சமுதாய வெளியீட்டகத்தினல் ஒவ்வொரு மாதமும் வெளியி டப்படும் 'அறவழி' பத்திரிகை அயராது உழைத்து வருகிறது.

அன்பு, கருணை, அஹிம்சை, ஜீவகாருண்யம் ஆகிய விடயங் களை மனிதனிடத்தில் அன்ரு டம் எடுத்துச் சொல்லும் அற வழி பத்திரிகை படிக்கப் படி க்க மகிழ்ச்சி தருவதாக உள் ளது."

முல்லைதீவு மாவட்ட மேல திக அரசாங்க அதிபர் திரு. எஸ். சண்முகலிங்கம் தனது ஆய்வுரையின்போது கூறியதா வது:

"பத்திரிகைகள், சஞ்சிகை கள் என்பது வெளியிடுவது சுலபமாக இருக்கும். ஆனல் அதனைத்தொடர்ந்து செய்வது எ பது முடியாத காரியம். ஆனல் அறவழி பத்திரிகை யைப் பொறுத்த வரையில் தொடர்ந்து மூன்று வருடம் வெளிவந்து கொண்டிருப்பது டன் வெளிநாடுகளிலும், உள் ளூரிலும் நூற்றுக்கணக்கான வர்களை சந்தாதாரர்களாக கொண்டிருப்பதும் ஒரு சாதனை யாகும்."

திரு. ப. செல்லத்துரை ஆசி ரியர் தனது ஆய்வுரையின் போது; அறவழி பத்திரிகை ஏனைய பத்திரிகைகளை விட ஒ ரு வித்தியாசமாக கோணத் தில் மக்களை கருத்து ரீதியாக வளர்த்தெடுக்கிறது.

ஆறு பக்கங்களில் வெளி வரும் இப்பத்திரிகையின் அரை பக்கம் சிறுவர்களுக்காக ஒதுக் கப்பட்டு அதில் சிறுவர்களுக் கான ஆங்கில விடயங்கள் பிர சுரிக்கப்பட வேண்டும். இது எமது சிறுர்களிடையே ஆங் கில அறிவை வளர்ப்பதற்கு உதவியாக இருக்கும் என்ரூர்.

ஆசிரியர் திரு.நா. சத்தியநா தன் தனது ஆய்வுரையின்போது தெரிவித்துள்ளதாவது; 'அறச் செய்திகளையும அன்பு, அஹிம் சை, சத்தியம் போன்ற தக வல்களையும் கட்டுரைகளாகவும் கவிதைகளாகவும் தாங்கி வ ரு கின்ற அறவழி எமது மக்களி டத்தில் நல்லதொரு சிந்த னையை ஏற்படுத்தியே தீரும் என்பதில் எவ்வித ஐயமு மில்லை."

விழா ஆரம்பத்தில் கைதடி ஆயுள்வேத டாக்டர் செல்வி கலாநாயகி சிங்கநாயகத்தின் மறைவுக்கு இரு நிமிட நேரம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

சிறப்பு பிரதிகள் பெற்றோர்

அறவழிப் போராட்டக்குழு தலைவர் திரு. வி. சு. துரை ராஜாவிடமிருந்து பத்திரிகை யின் சிறப்பு பிரதிகளைப் பெற் றுக் கொண்டோர் விபரம் பின் வருமாறு;

திருவாளர்கள்: வே. கதிர் காமு, க. தில்லையம்பலம், வே. குமாரசுவாமி, இ. கந்தசாமி, க. அமிர்தலிங்கம், ஆ. அர்ச் சுனன், பொ. கிருஷ்ணன, திரு மதிகள் இரட்ணவதி பரமசாமி, மாலா புஸ்பராசா, வே. மார்க் கண்டு, எஸ். மாணிக்கம், செ. இராசையா.

விழா ஆரம்பத்தில் வரவேற் புரையை திருமதி. இராசமமா சண் கநாதன் வழங்க, அறி முகவுரையை என். கே. துரை சிங்கம் நிகழ்த்தினர்.

பத்திரிகையின் சார்பில் ஆசி ரியர் க. ஜீவகதாஸ் பதிலுரை யும், நன்றியுரையும் வழங்கி னர்.

இலட்சியம்

- இலட்சியம் இல்லாத மனிதன் திசை காட்டும் கருவி இல்லாத கப்பலைப் போன்றவன்.
  — ஆவ்பரி.
- உயர்ந்த இலட்சியம் இல்லாத வாழ்க்கை, அந்த இலட்சியத்திற்காகப் பாடுபடாத வாழ்க்கை - வாழ்க்கையல்ல.
  — மாஜினி.
- ஒருவனுடைய இலட்சியம் இதுவென்று அறிந்து விட்டால், பின் அவனைப்பற்றி அறிந்து கொள்ளுதல் கடினமான காரியம் அன்று.
  — ஹோம்ஸ்.
- இன்பங்களைப் பெற முயல்வதினும் இலட்சி யங்களைப் பெருக்க முயல்வதே நலம்.
  — ஆவ்பரி.
- வாழ்க்கைக்கு வழிகாட்டியாக உயர்ந்த ஓர் இலட்சியம் இருக்க வேண்டும். அது இல்லா விட்டால் அவன் கேவல மிருகத்துக்குச் சம மாகப் போய்விடுவான்.
  விவேகானந்தர்.
- தாழ்ந்த இலட்சியத்தில் வெற்றி பெறுவதை விட உயர்ந்த இலட்சியத்தில் தோலவியுறு வதே மேல்.
  — ராபர்ட் பிரௌனிங்

தொகுப்பு:- கேஜே.

மாதிரிச் சிறுவர் நூலகங்கள்

சிறுவர்களிடையே வாசிக் கும் பழக்கத்தை உருவாக்கி, ஊக்குவிக்கும் பொருட்டு அற வழிப் போராட்டக் குழு ஐந்து மாதிரிச் சிறுவர் நூலகங் களை அமைக்கவுள்ளது.

இந்த நூலகங்கள் வட மராட்சி, தீவகம், கைதடி, கைதடி நுணுவில், மருதங் கேணி போன்ற இடங்களில் அமைக்கப்படும்.

அத்துடன், வேறு பத்துக் கிராமங்களில் சிறுவர் நூலகங் களும் நிறுவப்படும்.

“பலாக்காரத்தினுல் எதையும் சாதிக்க முடியாது”

— பேராசிரியர் கு. நேசையா

மகாத்மா காந்தியடிகளுடைய கொள்கைகளிலே ஊறி அவரது பாதையிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள் பலர் எம்மவர் மத்தியிலும் இருக்கின்றார்கள்.

இவர்களிலே காந்திய கொள்கைகளை மிகத்தீவிரமாக கடைப்பிடித்துக் கொண்டிருப்பவர் பேராசிரியர் கு. நேசையா அவர்கள்.

பேராசிரியர் நேசையா

சிறிய உருவம், நல்ல சிந்தனைகளை வெளிப்படுத்தும் பேச்சு, கருணைநிறைந்த கண்கள், எப்பொழுதும் எதைப் பற்றியாவது சிந்தித்துக் கொண்டு அல்லது யாருக்காவது ஆலோசனை வழங்கிக் கொண்டிருக்கும் பண்பு, கதர் ஆடை தரித்திருக்கும் அந்த உருவம் வேறு யாருமல்ல பேராசிரியர் கு. நேசையா அவர்கள் தான்.

எண்பத்தெட்டு வயதினைக் கடந்தும் சுறுசுறுப்பான நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் பேராசிரியர் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினேம்.

‘காந்தியக் கொள்கைகளை நீங்கள் கடைப்பிடிப்பதற்கு காரணம் என்ன’ என்று கேட்டேன்.

காந்தீயக் கொள்கை

“சிறிய வயதிலே காந்தியினுடைய நடவடிக்கைகளினுல் என்னையுமறியாமல் அவர்மீது பற்று வைத்துக்கொண்டேன். அவரது பாதை புனிதமானது. மற்றவர்களுக்கு துன்பமில்லாதது. அந்த வழியில் சென்றால் வெற்றி அடையலாம்.

நல்ல சிந்தனைகளையும், எண்ணங்களையும் மக்களிடையே பரப்பி ஒரு நல்ல வாழ்வை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு காந்தியினுடைய கொள்கைகள் தான் சிறந்த வழி.

இந்திய சுதந்திர விடுதலைக்காக அவர் தன்னைத்தானே தியாகம் செய்தமையும், அவரது அன்பு, கருணை, அகிம்சை ஆகிய கோட்பாடுகள் தான் இன்றைய இந்தியாவை வழிநடத்திக் கொண்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் காந்தி

“காந்தியை நேரில் சந்தித்து இருக்கிறீர்களா”?

“ஆம். 1927ம் ஆண்டுயாழ்ப்பாணம் வந்திருந்த காந்தியை அப்போது எம்மால் நிறுவப்பட்டிருந்த இளைஞர் காங்கிரஸ் சார்பாக வரவேற்று கலந்துரையாடி இருக்கிறோம்.

ஒரேற்றர் சுப்பிரமணியம், ஹண்டி பேரின்பநாயகம், கியூ. ஸி. நடேசன் போன்ற பெரியார்கள் தான் இந்த இளைஞர் காங்கிரசை நடத்திக் கொண்டிருந்தவர்கள், அவர்களுடன் சேர்ந்து திரு. காந்தி அவர்களை வரவேற்றது, உரையாடியது, கருத்துப் பரிமாறியது என்னுல் என்றுமே மறக்க முடியாதவை.

காந்தியினுடையவேலைத்திட்டங்களை நீங்கள் நடைமுறைப் படுத்தியிருக்கிறீர்களா?

வேலைத்திட்டம்

‘கிராம சுயராஜ்யம்’ தான் அவருடைய கொள்கை. அதற்கமைய சில கிராமங்களிலே சில வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்தியிருக்கிறோம்.

1955ம் ஆண்டு கண்டியில் கன்வெல எனற சிங்களக்கிராமத்தில் முதலாவது வேலைத் திட்டத்தினை நடைமுறைப் படுத்தினேம்.

32 சிங்களக் குடும்பங்கள் வாழ்ந்த இக் கிராமத்திற்கு வீதி யொன்றினையும். இங்குள்ள மக்கள் வாழ்வதற்கு குடிமனைகளையும் அமைத்துக் கொடுத்தோம்.

இதே போல, கிளிநொச்சி, நீர்வேலி போன்ற பல கிராமங்களில் சிரமதானத்தின் மூலம் புதிய வீதிகளை அமைத்துக் கொடுத்தோம். நீர்வேலியில் எம்மால் நிர்மாணிக்கப் பட்ட கைதடி - நீர்வேலி இணைப்பு வீதி இன்னும் சீராக அமைக்கப் படவில்லை.

இந்த வேலைத்திட்டங்களில் எல்லாம் தமிழ்மக்களைப் பார்க்கிலும் சிங்கள மக்களே கூடுதலாகப் பங்கு கொண்டிருந்தார்கள்.

1954ம் ஆண்டு காந்திசேவா சங்கம் ஒன்று அமைத்து அதனூடாக கிராமிய நிர்மாணப் பணிகள், மக்களிடையே காந்தீய சிந்தனைகளைப் பரப்புதல் அனுதைப் பிள்ளைகளுக்கான சுய தொழில் பயிற்சி என்பவற்றை வழங்கியிருக்கிறோம்.

காந்தீய சேவா சங்கத்தின் தலைவராக நான் தான் அப்பொழுது கடமை யாற்றினேன்.

இக்குறிப்பிட்ட காலப்பகுதியில் தென்னிலங்கையில் கடுகனுவ என்ற இடத்தில் ஐந்து நாள் வேலை முகாம் ஒன்றினை நடத்தியுள்ளோம்.

இனிய மனையாளுடன் பேராசிரியர்

தலைமுறை அப்படியே ஒன்றும் விடாமல் ஞாபகப்படுத்திச் சொல்லும் பேராசிரியரின் ஞாபக சிந்தனை கண்டு எம்மால் வியப்படையாமலிருக்க முடியவில்லை.

தமது சிறுவர் பராயத்து சம்பவங்களை இரைமீட்டிய பேராசிரியர் அவர்கள் ஒரு கட்டத்தில் தனது பெயர் நேசையா அல்ல என்றும் தெரிவித்தார்.

உங்களுடைய பெயர் என்ன என்று அவரிடமே கேட்டேன்.

காந்தியவாதி நேசையாவுடன் சந்திப்பு

யாழ். கூட்டம்

1932-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சுதந்திர கூட்டமொன்றை நடத்தினேம் இந்தக் கூட்டத்தில் சிவப்பு, மஞ்சள், பிறவுண் ஆகிய நிறங்களை உள்ளடக்கிய சுதந்திரக் கொடியும் ஏற்றப்பட்டது.

இக்கொடி முழுக்கமுழுக்க எனது சிந்தனையில்உருவானது. மூன்று நிறங்களைக் கொண்ட இக்கொடி தமிழர், சிங்களவர், முஸ்லீம் ஆகிய மூன்று இனத்தவரையும் குறிக்கும் விதத்திலும், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கியுமே தயாரிக்கப் பட்டது. இக்கொடிதான் சில மாற்றங்களுடன் இலங்கை தேசியக் கொடியாக இன்று இருக்கிறது.

வியப்பு

ஆரம்ப காலங்களில் தான் சார்ந்த அமைப்பு செய்த பணிகளையும், திகதி, நேரம் நாள் ஆகியவற்றை துல்லியமாக ஞாபகத்தில் வைத்திருந்து சொல்லும் பேராசிரியரின் ஞாபக சக்தியை நினைத்து நான் வியப்படைந்தேன்.

ரேயேஷ்ற்

“எனது பெற்றோர் எனக்கு வைத்த பெயர் ரேயேஷ்ற் (Rojerst). எனது பதினேழாவது வயதிலே நேசையா என்று நானே மாற்றினேன். அப்பொழுது எல்லாம் பெயர் மாற்றுவதற்கு அவ்வளவு பிரச்சினை இருக்கவில்லை. பாடசாலை இடாப்பிலே பெயர் மாற்றினுல் போதும். அதுவே எமது பெயராக பயன்படுத்தலாம் அதையே நான் செய்தேன்.

எனது முன்னைய பெயர் ஒரு ஆங்கிலப்பெயர் என்பதாலே நான் அதனைமாற்றி நேசையா என்ற தமிழ்ப்பெயரை வைத்தேன் என்று தெரிவித்தார்.

88 வயது

பேராசிரியர் அவர்கள் எண்பத்தெட்டு வயது வரையும் வாழ்ந்து விட்டார். இந்த காலத்தில் என்றுவது ஒருநாள் மச்சம் புசிக்கவில்லை எனறும் தெரிவித்தார்.

ஜப்பான், டென்மார்க், லண்டன், இந்தியா போன்ற பல நாடுகளுக்கு புலமைப் பரிசில் திட்டத்தின் கீழும வேறு சந்தர்ப்பங்களிலும் செல்ல வேண்டியநிலை ஏற்பட்டபோதும அவர் மாமிசம் புசிக்க வில்லை.

> அன்பு, கருணை, அஹிம்சை, ஜீவகாருண்ய சிந்தனையுடன் உண்மை, நேர்மை தியாகம் விசுவாசத்துடன் நாம செயற்பட்டு வந்தால் எதற்குமே அஞ்ச வேண்டியதில்லை.

ஏழைகளுக்கு உதவி

பேராசிரியர் அவர்கள் எம்முடன் உரையாடிக்கொண்டிருந்த பொழுது அவரது வீட்டுக் கேற்றடியில் நின்று ‘ஐயா .. ஐயா’ என்று யாரோ அழைக்கும் சத்தம் கேட்டது. நான் திருப்பிப் பார்ப்பதற்கு முன்னர் தனது அறைக்குச் சென்ற பேராசிரியர் அங்கே காசு எடுத்துவந்து வெளியே நின்றவரிடம் கொடுத்தார்.

தனக்குக் கிடைக்கின்ற பென்சன் சம்பளத்தில் ஏழை எளியவர்களுக்கு ஒருபகுதியை பராசிரியர் வழங்குவதாகவும் ஒவ்வொரு மாதமும் பென்சன் சம்பளம் எடுக்கும் பொழுது அந்த மக்களை இந்த வீட்டு வாசலில் சந்திக்கலாம் என்றும் என்னுடன் இருந்த அறவழிப் போராட்டக்குழுச் செயலாளர் க. ஜீவகதாஸ் தெரிவித்தோர்.

திருமதி நேசையா

பேராசிரியர் நேசையாவுடைய குடும்பம் சிறந்த முறையில் விளங்கவும், அவரதுகுழந்தைகள் சிறந்து விளங்கவும் காரணமாக இருந்தவர் திருமதி நேசையா.

காந்திக்கு அமைந்த கஸ்தூரி பாய் போல நேசையாவிற்கும் அவரது மனைவி நல்ல உதவியாக இருந்திருக்கிறார்.

வயது முதிர்ந்த நிலையிலும் கூட இருவரும் இணைபிரியாது இருந்திருக்கிறார்கள்.

சில காலங்களுக்கு முன் பேராசிரியர் அவர்கள் உலாபோகும்போது அவருக்குத் துணையாக மனைவி கையிலே பிடித்து வழிநடத்திச் சென்ற அந்தக்காட்சியை நினைத்துப் பார்க்கிறேன்.

இந்த தம்பதிகளின் ஒற்றுமை கடவுளுக்குகூட பொறுக்க முடியவில்லை. சில காலங்களுக்கு முன்னரே திருமதி நேசையாவை கவர்ந்து சென்று விட்டான்.

வலக்கை இழந்ததுபோல அவரது மனைவியின் பிரிவு இருந்தாலும் அவர் தனி மரமாக நின்று தனது கொள்கையிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

உறுதி

ஒரு காலத்தில் ஷெல் தாக்குதல்களும், இராணுவ நடவடிக்கைகளும் எமது மண்ணில் அதிகரித்திருந்தது,

அந்த நேரத்திலெல்லாம் இத்தாக்குதல்களுக்கு அஞ்சி பதுங்குகுழியிலும், பாதுகாப்பான இடங்களிலெல்லாம் மக்கள் எல்லோரும் இருந்த போதிலும் பேராசிரியரோ அவரது துணைவியரோ தங்களுடைய இல்லத்தைவிட்டு ஒரு கணமேனும் அசையவில்லை.

சந்தித்தவர் :
என். கே. துரை

இந்தச்சம்பவம் பேராசிரியரின் உறுதி தளராத கொள்கையைக் காட்டுகிறது.

‘அறவழி’ பத்திரிகை ஊடாக எமது மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்’ என்றேன்.

“பலாத்காரத்தினுல் எதையும் சாதிக்கமுடியாது. அன்பு, கருணை, அகிம்சை, ஜீவகாருண்ய சிந்தனையுடன் உண்மை நேர்மை, தியாகம், விசுவாசம் ஆகிய கொள்கைகளை கடைப்பிடித்து வந்தால் நாம் எதற்குமே அஞ்சவேண்டியதேயில்லை.

உண்மை ஒருநாளும் அழியாது. எனவே உண்மையுடன் செயற்படுங்கள். அதுவே எமக்கு வெற்றியைத் தேடித் தரும்.

மற்றவர்களுக்கு ஆலோசனை வழங்குவதினைவிட நாம் முன்மாதிரியாக நடக்கவேண்டும் என்று குட்டிப் பிரசங்கமே அவர் நிகழ்த்திவிட்டார்.

அறவழி
NONVIOLENCE

மேசன் தொழில் புரிவோருக்கு நிவாரணம் வழங்க வேண்டும்

— துரை —

சிமெந்து தொழில் புரிந்து தமது ஜீவனோபாயத்தை நடத்தி வந்த மேசன், கூலித்தொழிலாளர்கள் சிமெந்து இல்லாமையினால் இன்று தெருவுக்கு வந்து விட்டார்கள்.

அன்றாடம் வியர்வை சிந்தி, இரத்தம் சிந்தி உழைத்து தமது குடும்ப வண்டிகளை ஓட்டி வந்த இவர்கள் ஒரு நாளைக்கு வேலைக்குப் போகாவிட்டால் வீட்டில் அடுப்படி புகைய மாட்டாது, வீட்டிலுள்ளவர்களின் வயிறு தான் புகையும் பசியினால்.

யாழ். குடாவைப்பொறுத்த வரை இந்த தொழிலை நம்பி இருபத்தையாயிரம் பேர் வரையில் வாழ்க்கை நடத்துகிறார்கள். இவர்களின் தொழில் பாதிக்கப்பட்ட நிலையில், பசி தொடருகின்ற நேரத்தில் புசிப்பதற்கு வழி தெரியாமல் திண்டாடுகிறார்கள்.

பட்டினியோடு எத்தனை நாள் வாழ்க்கை நடத்த முடியும் என்பது அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும்.

தினசரி ஆயிரத்து அறுநூறு தொன் சிமெந்து உற்பத்தி செய்துவந்த காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையும் தனது உற்பத்தியை நிறுத்தி விட்டது யாவரும் அறிந்ததே.

இப்போதைக்கு இங்கு உற்பத்தி நடக்குமா என்பது சந்தேகமாக உள்ளது. இதனால் பல்வேறுபட்ட பல்லாயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டாலும், கூடுதலான அளவு பாதிப்பிற்குள்ளாகியிருப்போர் மேசன், கூலித் தொழிலாளர்கள்தான் என்பதனை அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

குடிமக்கள் யாராவது பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு உதவ வேண்டியது அரசாங்கத்தினதும், தொண்டர் நிறுவனங்களினதும் கடமையாகும்.

எமது நாட்டைப் பொறுத்த வரையில் எத்தனையோ வகையான பாதிப்புக்களுக்கு எமது மக்கள் உட்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பல நிறுவனங்களும் உதவிகள் புரிந்துள்ளன.

மேசன் தொழிலாரைப் பொறுத்த வரையில் அவர்களுக்கென எந்த உதவிகளோ, நிவாரணமோ தொழில் பாதிக்கப்பட்டவர்கள் என்ற ரீதியில் இதுவரையும் வழங்கப்படவில்லை என்பதனை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

முன்னர் ஒரு தடவை இந்த சிமெந்து உற்பத்தி பாதிக்கப்பட்டபோது சனசமூக நிலையங்கள் போன்ற பல நிறுவனங்கள் மேசன் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று அரசாங்கத்தையும், ஏனைய நிறுவனங்களையும் கோரியிருந்தது. ஆனால் உதவி வழங்கப்படவில்லை.

ஆனால் இம்முறை இத் தொழில் செய்யும் அனைவரும் தங்களுக்கு உதவி வழங்க வேண்டும் என்று கூட்டாக கோரிக்கை விட வேண்டும்.

பத்திரிகைகளில் நிவாரணம் வழங்க வேண்டும்எனஅறிக்கை விட்டால் மாத்திரம்போதாது. அதனைச் செயற்படுத்தும் நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்.

கட்டிடங்கள் கட்டும் தொழிலாளி ஒருவனுக்கு அவன் வாழ்வதற்கு ஒரு சொந்தக்கட்டிடம் இல்லையென்பதையும், அவன் நடத்தும் வாழ்க்கைப் போரையும் இத்தருணத்தில் உலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.

தெருவிற்கு வந்து விட்ட தொழிலாள தோழர்களே! உங்கள் உரிமைகளுக்காக போராடுவதற்கு ஒருநாளும் பின் நிற்காதீர்கள்.

கடற்றொழிலுக்கு பாதிப்பு ஏற்பட்டபொழுது இத் தொழில் செய்பவர்களுக்கு விசேட உணவு முத்திரை வழங்கப்பட்டது.

இதுபோன்று ஏதாவதொரு திட்டத்தை நடைமுறைப்படுத்தி இத் தொழிலாளர்களுக்கு உதவி புரிய வேண்டும் என்பதனை வலியுறுத்துகிறோம்.

சிமெந்து உற்பத்தி மீண்டும் ஆரம்பிக்கின்ற நிலைமை வந்தாலும் கூட அவர்கள் வேலையில்லாமல் இருந்த காலங்களில் பட்ட கஷ்டங்களுக்காக மேசன் தொழிலாளர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

"THERE IS NO WAY TO PEACE, PEACE IS THE WAY"

— A. J. MUSTE

பௌத்த நாடுகளில் புத்தரின் போதனைகள் உதாசீனம்?

பௌத்த கல்விமான் 'சூலக்' கவலை!

(பாங்கொக்)

"புத்தபிரானின் போதனைகளையும்—கொள்கைகளையும் பின்பற்றி வருகின்ற தாய்லாந்து, ஸ்ரீலங்கா, பர்மா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் வன்செயல் நிகழ்வுகள் அன்றாடம் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நாடுகளில் நீதிமுறைகள் அருகி விட்டன. புத்தரின் போதனைகளாகிய அன்பு — இரக்கம் — சகிப்புத்தன்மை — சகோதரத்துவம் — கொல்லாமை — மனிதநேயம்—ஜீவகாருண்யம் போன்றவற்றினை இந்த நாடுகளில் தேட வேண்டிய நிலைமை தோன்றியுள்ளது. உலகில் செறிந்து வாழ்கின்ற ஏனைய பௌத்தர்களுக்கு இது கவலை தருவதாகவுள்ளது"

இவ்வாறு தாய்லாந்தில் அண்மையில் நடைபெற்ற பன்னாட்டுப் பௌத்தர்களின் மாநாடு ஒன்றில், தாய்லாந்தைச்சேர்ந்த பௌத்த கல்விமானும், சமாதானப் பணியாளருமான திரு மிகு. சூலக் சிவராக்சா மிகுந்த கவலையுடன் தெரிவித்தார்.

திருமிகு. சூலக் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"தாய்லாந்தில் விபச்சாரம் இன்று உச்சகட்டத் தொழிலாகி விட்டது. உலகிலேயே குற்றவிகிதம் அதிகரித்த நாடாகத் திகழ்கின்றது. கொலை, களவு, ஏமாற்றல் போன்றவை இங்கு இடம்பெற்று வருகின்றன"

"முன்பொரு காலத்தில் அமைதிமிக்க சொர்க்கபுரியாக விளங்கிய ஸ்ரீலங்காவில் வன்செயல், பயங்கரவாதம், அழிவு வேலைகள் மிகவும் அதிகரித்துள்ளன. இனப்படுகொலைகள் தொடர்கின்றன."

"பங்களாதேஷின் தென்கிழக்குப் பகுதியில் வாழும் பழங்குடிப் பௌத்தர்கள் வாழ்கின்ற சிட்டங்கொங் பகுதியில் தொலைகள் — அட்டூழியங்கள் தொடர்கின்றன."

"பர்மாவில் அரசியல் அடக்குமுறைச் சம்பவங்களால் வன்முறைகள் இடம்பெறுகின்றன. வெறுப்பு, கோபம், ஆத்திரம், பழிக்குப்பழி வாங்கும் உணர்வுகள் அதிகரித்துள்ளனவே" என்றார்.

இலங்கையில் இரு இனங்களுக்கிடையே நிலவிக் கொண்டிருக்கும் பிரச்சனைகளுக்கு அமைதி வழித் தீர்வுகளை காண்பதில் திருமிகு. சூலக் சிவராக்சா பல தடவைகள் முயற்சித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

"பௌத்த மதத்தினைத் தம் மதம் என்று கூறிக் கொள்வதால் மட்டும் பெருமையில்லை. அம் மதம் போதிக்கும் வழிப் பிரகாரம் வாழ்ந்து காட்டுதலே சிறப்பும் — பெருமையுமாகும்.", எனவும், "இந்நாடுகளில் இருக்கின்ற பௌத்த குருமார்களுக்கு நல்ல கல்வி அளிக்கப்படல் வேண்டும். மதரீதியாக மக்களை வழி நடத்திச் செல்வதைவிட்டு, பிக்குகள், — கோவில்களைக் கட்டுவதிலும், தம் சமூக மக்களை அபிவிருத்தி செய்வதிலுமே ஈடுபட்டுக் கொள்கின்றனர்" என்றும் தெரிவித்தார்.

அறவழிப் போராட்டக்குழுவினால் இரண்டாம் கட்டமாக விதவைகள் மறு வாழ்வு திட்ட உதவி வழங்கும் போது எடுக்கப்பட்ட படம்.

நிகழ்சியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சாவகச்சேரி நீதவான் உயர் திரு. க. திருநாவுக்கரசு உரையாற்றுவதை முதலாவது படத்திலும், விதவை ஒருவருக்கு திருமதி மங்கையர்கரசி திருநாவுக்கரசு தேசிய சேமிப்பு வங்கியின் அறக் கொடைத்திட்டச் சான்றிதழ் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

படம்: ஜீவனு போட்டோ — சாவகச்சேரி.

கத்தோலிக்க அச்சகத் தொழிலாளர்கள் கௌரவிப்பு

"அறவழி" பத்திரிகையின் இருபத்தைந்தாவது இதழ் வெளியீடு சம்பந்தமாக புதிய சமுதாய வெளியீட்டகம் யாழ். புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் பணிபுரியும் தொழிலாளச் சகோதரர்களுக்கு 6-9-1989ம் திகதி ஓர் தேனீர் விருந்து வைபவத்தை நடாத்திக் கௌரவிக்கவுள்ளது.

கத்தோலிக்க அச்சகத்தின் தொழிலாளர்கள் அறவழிப் பத்திரிகையின் வெளியீட்டுப் பணியில் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக ஆற்றி வந்த விசுவாசமிக்க மனித உழைப்பை வாழ்த்துவதிலும் ஊக்குவிப்பதிலும் புதிய சமுதாய வெளியீட்டகம் பெருமை கொள்கிறது.

இப்பத்திரிகை புதிய சமுதாய வெளியீட்டகத்தால் யாழ்ப்பாணம் புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989 புரட்டாதி மாதம் அச்சேற்றி வெளியிடப்பட்டது.

சீதேவியும் மூதேவியும்

ஒரு சமயம் சீதேவியும், மூதேவியும் திருமாலிடம் போனார்களாம். "தங்கள் இருவரில் யார் அழகு? என்றுகேட்டார்களாம்.

மாலவன் இருவரையும் கொஞ்சத்தூரம்நடந்துபோகச் சொன்னாராம் இருவரும், கொஞ்சத்தூரம் போனபின் திரும்பி வரச் சொன்னாராம்.

மாலவன் சீதேவியைப்பார்த்து "நீ வரும்போது அழகாய் இருக்கிறாய்' என்றாராம்.

மூதேவியைப் பார்த்து "நீ போகும் போது அழகாய் இருக்கிறாய்" என்றாராம்.